செ.வெ.எண் 35 நாள் 18.10.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**வேலா கருணை இல்லத்தில் மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று நினைவு திரும்பிய நபர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார் .**

**அதன் விவரம் பின்வருமாறு**

வேலா மனநிலை பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லம் தேசிய நெடுஞ்சாலையில் சீரடி சாய்பாபா கோவிலுக்கு எதிர்புறம் இயங்கி வருகிறது. 15.07.2019ஆம் தேதி அன்று மனநலம் பாதிக்கப்பட்டு சுற்றித்திரிந்த திரு. அப்சர் அலி (எ) நாசத் அலிகான் என்பவரை திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலை கல்பாடிசாலையின் அருகில் இருந்து மீட்டு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மனநலம் மருத்துவரின் ஆலோசனையின்படி மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தி வேலா மனநல இல்லத்தில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. மேலும் நீதிமன்றத்தின் முதல் தகவல் அறிக்கை பெறப்பட்டு கடந்த 3 ஆண்டுகளக வேலா மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லத்தில் தங்கி மருத்துவ சிகிச்கை பெற்று வந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்பு சுய நினைவுக்கு வந்த பின் அவரிடம் பெறப்பட்ட விவரங்களின்படி, மும்பையில் வசிக்கும் அவருடைய பெற்றோருக்கு கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்களை நேரில் வரவழைத்து இன்று 18.10.2021 மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்நிகழ்வில், திட்ட அலுவலர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) திருமதி அ. லலிதா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி பொம்மி, வேலா கருணை இல்லத்தின் நிர்வாகி திருமதி அனிதா அருண்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர்.